பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

08 12 2025 7 15

திங்கட்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி மக்களவையில் இன்று சிறப்பு விவாதத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

2. நாடு முழுவதும் விமான சேவையில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து விளக்கம் அளிக்குமாறு இண்டிகோ நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட கால அவகாசம் இன்று மாலை 6 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

3. மகாராஷ்டிரா சட்டப்பேரவை குளிர்கால கூட்டத்தொடர் நாக்பூரில் இன்று தொடங்குகிறது.

4. இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தில்லியில் இன்று மீண்டும் தொடங்குகிறது.

5. உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கி இறுதிப் போட்டிக்கு ஜெர்மனி, ஸ்பெயின் அணிகள் முன்னேறியுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி மக்களவையில் இன்று சிறப்பு விவாதத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

நண்பகல் 12 மணிக்கு தொடங்கும் விவாதம் 10 மணி நேரம் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

ஏற்கனவே மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வந்தே மாதரம் குறித்த விவாதம் இன்றும், தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதம் நாளையும் நடத்த முடிவு செய்யப்பட்டதாக திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் விமான சேவையில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து விளக்கம் அளிக்குமாறு இண்டிகோ நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட கால அவகாசம் இன்று மாலை 6 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 நாட்களாக இந்நிறுவனத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டதால் அதில் பயணம் செய்ய முன்பதிவு செய்திருந்த ஏராளமான பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து அந்நிறுவனம் நேற்று மாலைக்குள் விளக்கமளிக்க வேண்டும் என்று சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

கூடுதல் அவகாசம் கோரப்பட்டதையடுத்து, இன்று மாலை 6 மணி வரை இந்த அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக அந்த இயக்குநரகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் நாடு முழுவதும் விமான சேவைகள் சீரடைந்து வருகின்றன.

நிலைமையை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

<<<<>>>>

இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தில்லியில் இன்று மீண்டும் தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இந்தப் பேச்சுவார்த்தையில் இந்தியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதர் திரு. Herve Delphin தலைமையிலான பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

இந்தக் குழுவுடன் மத்திய வர்த்தகத்துறை அமைச்சக பிரதிநிதிகள் பேச்சு நடத்த உள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை இந்தியா - ஐரோப்பிய ஒன்றியத்திற்கிடையே வலுவான பொருளாதார உறவுகளை ஏற்படுத்துவதற்கான நீண்டகால முயற்சியின் முக்கிய நடவடிக்கையாக கருதப்படுகிறது.

இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் இடையே இருதரப்பு வர்த்தகம், 137 புள்ளி 5 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.

<<<<>>>>

கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அரசாங்கங்களுக்கு இடையேயான குழுவின் 20வது அமர்வு புதுதில்லியில் உள்ள செங்கோட்டையில் இன்று தொடங்குகிறது.

யுனெஸ்கோவுக்கான இந்திய தூதரும், நிரந்தரப் பிரதிநிதியுமான திரு. விஷால் வி.ஷர்மா தலைமையில் நடைபெற உள்ள இந்த அமர்வில், இந்த ஆண்டுக்கான யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் இந்தியாவின் தீபாவளிப் பண்டிகையை சேர்ப்பது குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை ஏற்கனவே தீபாவளிப் பண்டிகையை தனது பரிந்துரையாக சமர்ப்பித்துள்ளது.

ஆறு நாட்கள் நடைபெறும் இந்த அமர்வில் யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் சேர்ப்பதற்காக பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்துள்ள பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

குஜராத் மாநிலத்தின் முதலாவது பெண் முதலமைச்சரும், உத்தரப்பிரதேச ஆளுநருமான திருமதி ஆனந்தி பென் பட்டேலின் வாழ்க்கை வரலாறு மற்றும் போராட்டங்கள், மற்றவர்களுக்கு ஊக்கமளிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அவரது வாழ்க்கை வரலாறு குறித்த குஜராத்தி மொழிபெயர்ப்பு நூலை நேற்று அகமதாபாதில் வெளியிட்டுப் பேசிய அவர், பதவிக்காக அல்லாமல் மக்களின் வளர்ச்சிக்காக உழைக்கும் தலைவர்களில் ஒருவர் திருமதி ஆனந்தி பெண் பட்டேல் என்று கூறினார்.

ஆசிரியர், சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், குஜராத் முதலமைச்சர், உத்தரப்பிரதேச ஆளுநர் என அவர் தமக்கு அளிக்கப்பட்ட அனைத்து பொறுப்புகளையும் திறம்பட நிறைவேற்றி வருவதாகவும் திரு. அமித் ஷா புகழாரம் சூட்டினார்.

திருமதி ஆனந்தி பென் பட்டேலின் நேர்மை, நிர்வாகத்திறன் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை இன்றும் குஜராத் மக்களால் நினைவுகூறப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா சட்டப்பேரவை குளிர்கால கூட்டத்தொடர் நாக்பூரில் இன்று தொடங்குகிறது.

வரும் 14ஆம் தேதி வரை ஒருவாரம் நடைபெற உள்ள இந்தக் கூட்டத் தொடரின் முதல் நாளான இன்று துணை மானியக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

இந்தக் கூட்டத்தொடரில் வேளாண் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்க மாநில அரசு தயாராக இருப்பதாக முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் கூறியுள்ளார்.

மொத்தம் 18 மசோதாக்கள் இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் சட்டப்பேரவை மற்றும் சட்ட மேலவைகளின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளை வழங்க மாநில அரசு மறுப்பதாக காங்கிரஸ் மற்றும் சிவசேனா உத்தவ்தாக்கரே பிரிவு குற்றம் சாட்டியுள்ளது.

<<<<>>>>

ஹைதராபாதில் இன்று தொடங்க உள்ள தெலங்கானா முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று அம்மாநில அரசு கூறியுள்ளது.

மாநிலத்தில் தொழில்துறையை பலப்படுத்தும் வகையில் புத்தாக்க சூழல் அமைப்பை உருவாக்குவது இளைஞர்களுக்கு மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவை இம்மாநாட்டின் நோக்கம் என்று தெலங்கானா மாநில அரசு கூறியுள்ளது.

இந்த மாநாட்டில் 44 நாடுகளில் இருந்து 150 பிரதிநிதிகளும், உள்நாட்டில் இருந்து 2 ஆயிரம் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளதாக மாநில அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் இந்த மாநாட்டை தெலங்கானா மாநில ஆளுநர் திரு. ஜிஷ்னுதேவ் வர்மா முறைப்படி தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

கோவாவில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 25 பேர் உயிரிழந்தது தொடர்பாக அந்த விடுதியின் பொதுமேலாளர் உட்பட 4 பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.

ஏற்கனவே விபத்து குறித்து விடுதியின் உரிமையாளர், மேலாளர் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடுதிக்கு 2013ஆம் ஆண்டு வர்த்தக உரிமத்தை வழங்கியதாக கூறப்படும் அர்போரா நாவா பஞ்சாயத்து தலைவர் ஏற்கனவே காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று கோவாவில் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த், தீ விபத்திற்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலத்தில் பருவம் தவறிய மழையால் பாதிக்கப்பட்ட 90 லட்சம் விவசாயிகளில் 92 சதவீதம் பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மீதமுள்ள விவசாயிகளுக்கு விரைவில் உதவிகள் வழங்கப்படும் என்று அம்மாநில அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 3 புள்ளி 3ஆக பதிவானதாக தேசிய புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சேதம் ஏற்பட்டதாக தகவல் ஏதுமில்லை.

<<<<>>>>

கடும் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து உதவி செய்து வருகிறது.

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் மேலும் நிவாரணப் பொருட்கள் அந்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை 300 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் இலங்கையிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து 700 டன் நிவாரணப் பொருட்கள் அடங்கிய கப்பல் நாளை திரிகோணமலையை சென்றடைய உள்ளது.

<<<<>>>>

மத்தியப்பிரசேதம், ஒடிசா, சத்தீஸ்கட், மகாராஷ்டிராவின் விதர்பா பகுதிகளில் இன்று கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிகோபார் தீவுப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அசாம், மேகாலயா, ஹிமாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் ஒடிசா மாநிலங்களில் இம்மாதம் 11ஆம் தேதி வரை அடர்ந்த பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கி இறுதிப் போட்டிக்கு ஜெர்மனி, ஸ்பெயின் அணிகள் முன்னேறியுள்ளன.

சென்னையில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஜெர்மனி 5-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயின் 2-1 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வென்றது.

இறுதிப் போட்டியில் ஜெர்மனி - ஸ்பெயினை எதிர்கொள்ள உள்ளது.

நாளை மறுநாள் நடைபெற உள்ள வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் இந்தியா - அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

---------------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கேப்டவுனில் நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் துவக்கம் முதலே இந்தியா ஆதிக்கம் செலுத்தியது.

இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி இன்றிரவு மணி 8.30க்கு நடைபெற உள்ளது.

சூப்பர் கோப்பை கால்பந்துப் போட்டியின் சாம்பியன் பட்டத்தை 3வது முறையாக கோவா வென்றுள்ளது.

கோவாவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் கோவா, 6-5 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

<<<<The End>>>>